[1981 பிப்ரவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று விவர அறிக்கை இந்த வினாவிற்கல்ல. வினா எண் 244-க்கு ஒரு குறியிடப்பெற்று அந்தக் குறியின்படி விவர அறிக்கை தனியே வைக்கப்பட்டுள்ளது என்று போடப்பட்டுள்ளது எனவே, அந்த இரண்டையும் சேர்த்து படித்துக் கொள்ளவேண்டும்.

திரு. ஏ. சி. சண்முகம் : இந்த கொத்தவால் சாவடியை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டத்திற்கு, எவ்வளவு தொகை அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது ? அது எப்போது முடிவடையும் ? அப்படி கொத்தவால் சாவடியை வேறு இடத்திற்கு மாற்றும்போது தற்போது கொத்தவால் சாவடியில் வேலையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் புதிய இடத்தில் இடம் கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : இந்த கொத்தவால் சாவடியைப் பொறுத்து அங்கே போக்குவரத்து நெருக்கடியும் சுகாதாரக் கேடும் இருப்பதால் அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். என்று எவ்வளவோ முறை இந்த மன்றத்தில் விவாதித்திருக்கிறோம். ஆகவே அரசாங்கம் பரிசீலனை செய்து எப்போது இது மாற்றப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விரைவில் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

[முற்பகல் 9-30].

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொத்தவால் சாவடி தமிழ் நாடு முழுவதிலும் உள்ளவர்களுக்குத் தெரிந்த முக்கியமான இடம். அதிலே சுகாதாரக் கேடுகள் இருக்கின்றன என்ற காரணத்திற்காக அதை மாற்றுவது என்பது சரியல்ல. அந்தச் சாவடியிலே சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுத்து, அந்தக் கொத்தவால் சாவடியை அபிவிருத்தி செய்தால், அந்தப் பகுதி வியாபார மக்களுக்கும் வசதியாக இருக்கும். அதைச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்துக்கு யாரிடத்திலிருந்தும் ஆதரவு இல்லை. அது சரியான யோசனையும் இல்லை.

ஈரோடு நகரில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம்.

*வினா எண் 248— திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோடு நகரத்திற்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்?

1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1982-ல் எடுத்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எத்தனை கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படுகிறது? எந்த ஆண்டு முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது உத்தேச மதிப்பீடு மீது அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் செயலுக்கு 1982 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

உசிலம்பட்டிக்கு குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா எண் 249— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உசிலம்பட்டி நகரத்திற்கு வைகை நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மேற்படி செயற் குறிப்பு எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) உசிலம்பட்டி பேரூராட்சிக்கு வைகை நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு ஜனவரி 1980-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) செயலாக்கத்திலுள்ள இத்திட்டம் மார்ச் 1982-ல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இதற்காக எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.